**வாக்குமூலம்**
**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**
**மேட்டூர்,**
**தேதி: 27.07.2026**
**OS. No. 170/2024**
**வழக்கு சாட்சி PW.1– பழனிசாமி, த/பெ.மாரியப்பன்**

(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார் )

**<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

1) எனக்கு எழுத, படிக்க தெரியுமா என்றால் தெரியாது. என் தந்தை பெயர் மாரியப்பன் ஆகும். என் தாத்தா பெயர் வீரப்ப கவுண்டர் ஆகும். என் தாத்தா வீரப்ப கவுண்டருக்கு ஐந்து பிள்ளைகள். அவர்கள் பெயர்கள் குழந்தைகவுண்டர், ஆனந்த கவுண்டர், பொன்னுசாமி கவுண்டர், மாரியப்ப கவுண்டர், சின்னதம்பி ஆகும். என் தந்தை மாரியப்ப கவுண்டருக்கு மொத்தம் நான்கு பிள்ளைகள். அவர்கள் பெயர்கள் வீரப்பன், கந்தசாமி, மாதையன், பழனிசாமி(வாதி) ஆகும். என் தாத்தா வீரப்ப கவுண்டருக்கு கோல்நாயக்கன்பட்டி கிராமம் தெர்க்கத்திகாட்டில் மொத்தம் எவ்வளவு சொத்து உள்ளது, அதன் சர்வே எண்கள் தெரியுமா என்றால் தெரியாது.

2) எங்கள் சொத்தில் வீடு, மரங்கள் உள்ளன, சித்திரை காலத்தில் காற்றுடன் மழை அதிகமாக பெய்ந்தால் மின் சார லைன் ஒயர்கள் எங்கள் வீட்டின் மீது விழுந்து உயிர்சேதம் ஆவதற்கு வாய்ப்புள்ளதால் இந்த வழக்கை தாக்கல்செய்துள்ளோம். தற்போது அந்த மின் சார லைன் ஒயர்கள் உள்ளதா என்றால் தற்போது இல்லை. எங்கள் வீடு எந்த சர்வே எண், பட்டா எண் ஆகியவை தெரியுமா என்றால் எனக்கு தெரியவில்லை. என் தாத்தா வீரப்ப கவுண்டர் பெயரிலுள்ள சொத்து கூட்டு பட்டா சொத்து என்றால் சரிதான்.

3) ச.எண்.180/1A4 மற்றும் ச.எண்.180/1A1, பட்டா எண்.1798 ஆகியவற்றில் தான் அந்த சொத்து அமைந்துள்ளது என்றால் எனக்கு தெரியவில்லை. எங்கள் குடும்பத்தில் வீரப்ப கவுண்டர் சொத்தின் பேரில் தனிப்பட்டா வாங்கியுள்ளோமா என்றால் இல்லை. கூட்டுபட்டாவிலுள்ள எங்கள் உறவினர்களிடம் மின் இணைப்பு பெறுவதற்கு ஏதேனும்

ஆட்சேபனை எழுதி வாங்கினேனா என்றால் இல்லை. வா.சா.ஆ–4 வரைபடத்தில் பூலம்பாட்டி – மேட்டுர் சாலைக்கு கிழக்கு பக்கமாக எங்கள் வீடு அமைந்துள்ளதாக காட்டியுள்ளோம் என்றால் சரிதான். அதிலுள்ள முதல் வீடு மாதையன் வீடு என்றும், இரண்டாவது வீடு 2ம் வாதியான என்னுடைய வீடு என்றும், மூன்றாவது வீடானது 1ம் பிரதிவாதி வீரப்பன் வீடு என்றும், நான்காவதாக என்னுடைய விவசாய நிலமும், ஐந்தாவதாக 1ம் வாதி கந்தசாமியின் நிலமும், கடைசியாக 1ம் பிரதிவாதி வீரப்பன் வீடும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி கடைசியிலுள்ள வீரப்பன் வீட்டிற்கு தான் மின் சார இணைப்பு வழங்கக்கூடாது என்று இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி கடைசியிலுள்ள வீரப்பன் வீட்டிற்கு அடுத்து தென்வடலாக செல்லும் வாய்க்கால் உள்ளது என்றால் சரிதான்.

4) மேற்படி ஆறு பகுதிகளாக காண்பிக்கப்பட்ட சொத்திற்கு வடக்குபுறம் மேட்டுர் – பூலாம்பட்டி செல்லும் தார் சாலையிலிருந்து வாய்க்காலுக்கு தடவழி செல்கிறது என்றால் சரியல்ல, தடவழி எதுவும் இல்லை, அது எங்கள் பங்காளிகள் காடு ஆகும், அந்த கரையில் நாங்கள் சென்று வருகிறோம். அந்த தடவழியில் ஏற்கனவே மின் கம்பம் நடப்பட்டு, மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது என்றால், அது பங்காளிகள் காட்டில் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. மேற்படி கடைசியிலுள்ள வீரப்பன் வீட்டிற்கு எதிரே தான் மின் கம்பம் நடப்பட்டது என்றும், ஆனால் நாங்கள் தான் மின் சார ஊழியர்களிடம் பிரச்சனை செய்து துரத்திவிட்டோம் என்றால் சரியல்ல.

5) தற்போதும் மேற்படி மின்கம்பம் மேற்படி கடைசியிலுள்ள வீரப்பன் வீட்டிற்கு எதிரே தான் இணைப்பு எதுவும் வழங்கபடாமல் கிழே போட்டு வைத்துள்ளார்கள் என்றால் சரிதான். கம்பம் நடுவதற்கும், மின் இணைப்பு கொடுப்பதற்கும் முயற்சி செய்தால் 1ம் வாதி கந்தசாமியின் மனைவி வெள்ளச்சி என்பவர் அந்த கம்பத்திலேயே தூக்கு மாட்டிக்கொள்வேன் என்று ஊழியர்களை மிரட்டுகிறார் என்றால் அவருடைய பாகத்திற்கு இடைஞ்சலாக வருவதால் அவ்வாறு சொல்லியுள்ளார். அதேபோல் என்னுடைய மனைவியும் மின் கம்பம் நடும் குழியில் அமர்ந்து கொண்டு, நடக்கூடாது என்று பிரச்சனை செய்கிறார் என்றால் எங்களுடைய பாகத்திற்கு இடைஞ்சலாக வருவதால் அவ்வாறு சொல்லியுள்ளார்.

6) வா.சா.ஆ.4 வரைபடத்தில் காண்பிக்கப்பட்டுள்ள ஆறு பகுதிகளின் அளவுகள் தெரியுமா என்றால் தெரியாது. நானும், 1ம் வாதி கந்தசாமியும் மின் கம்பம் நடுவதற்கு முன்பு காவல் நிலையத்திலும், மின்சார வாரியத்திலும் புகார் மனுக்கள் கொடுத்துள்ளோம் என்றால் சரிதான். ஆனால் கம்பம் நட வரும் போது எங்கள் மனைவிகள் தான் மறுப்பு தெரிவிக்கிறார்கள் என்றால் சரிதான். உயர் மின் ஒயர்கள் செல்வதற்கு ஒப்புக்கொண்டு தான் நாங்களே மின் இணைப்பு பெற்றோம் என்றால் சரியல்ல. மின்சார துறையினர் சட்டத்திற்குட்பட்டு தான் மின் இணைப்பு கொடுப்பார்கள் என்றால் சரியல்ல.

7) ஒரு வீட்டிற்கு மேல் மின்சார ஒயர்கள் எடுத்து செல்லலாம் என்று மின்வாரிய சட்டத்தில் பிரிவு 50ல் அதாவது தெருவில் இருந்து கட்டிட முகப்பிற்கு நேராக செல்ல முடியாமல் அண்டை வீட்டின் மீது மின் கம்பி தொட குறுக்கே அல்லது மேலே சென்று உங்கள் கட்டிட முகப்பை அடைய வேண்டி இருந்தால் அங்கனம் செய்வதற்கான வழிவகைகளை உங்கள் செலவிலேயே செய்து கொள்ளலாம் என சொல்லப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியவில்லை. மேற்படி கடைசியிலுள்ள வீரப்பன் வீட்டிற்கு மின் இணைப்பு கொடுக்கக்கூடாது என்ற கெட்ட எண்ணத்தில் 7, 8 ஆண்டுகளாக மின் வாரியத்திற்கு மனு கொடுப்பதும், நீதிமன்றத்தில் வழக்குகள் தாக்கல் செய்வதும், அதை 5, 6 ஆண்டுகள் கழித்து அவ்வாறே விட்டு விடுவது போன்ற செயல்கள் செய்து வருகிறோம் என்றால் சரியல்ல.

8) அ.வ.எண்.23/2005 என்ற வழக்கும், அ.வ.எண்.94/2015 என்ற வழக்கும் தாக்கல் செய்து வருகையின்மைக்காக தள்ளுபடிக்கு விட்டுவிட்டோம் என்றால் சரியல்ல. அதே பகுதியில் குழந்தைசாமி மகன் முத்துசாமி என்பவர் 24.10.2024ல் மின் இணைப்பு பெற்றுள்ளார் என்றால் சரியல்ல. அ.வ.எண்.94/2015 என்ற வழக்கில் முத்துசாமி த/பெ. குழந்தைபைய கவுண்டர், மாதையன் த/பெ.குழந்தைபைய கவுண்டர், மாதையன் த/பெ.பொன்னுசாமி ஆகியோர்கள் சேர்ந்து தான் வீரப்பன் மீது தாக்கல் செய்தோம் என்றால் சரிதான், அந்த வழக்கிற்கும், இதற்கும் சம்மந்தமில்லை. அந்த வழக்கில் பெரியதாயி பெயர் சேர்க்கவில்லை என்றால் சரிதான். ஆனால் பெரியதாயியின் பெயர்

இருப்பதாக பொய்யான தகவல் கொடுத்து மின் வாரியத்தில் மின் இணைப்பு தர ஆட்சேபனை செய்தோம் என்றால் சரியல்ல.

9) 11.02.2020 ல் உதவி பொறியாளர் இயக்கமும், பராமரிப்பும் புறநகர் மேட்டூர் மின்வாரியம் அவர்களுக்கு பெரியதாயிக்கு மின் இணைப்பு வழங்கக்கூடாது என்று ஆட்சேபனை தெரிவித்தும், பெரியதாயின் ஆவணங்கள் பொய்யானது என்றும் மறுப்பு தெரிவிக்கப்பட்டது என்றால் சரிதான். அதேபோன்று கந்தசாமி அவர்களும் அதே தேதியில் மறுப்பு தெரிவித்தார் என்றால் சரிதான். அதேபோன்று கிருஷ்ணன் த/பெ.சாமியண்ணனும் மறுப்பு தெரிவித்தார் என்றால் சரிதான். ஆனால் நான் ஆட்சேபனை இல்லை என்று 06.03.2023 ல் உதவி பொறியாளருக்கு விண்ணப்பம் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

10) பெரியதாயிக்கு மின் இணைப்பு வழங்கக்கூடாது என்று பல ஆண்டுகளாக மின் வாரியத்திற்கும், காவல் துறைக்கும் மனுக்கள் கொடுத்துள்ளேன் என்றும், தொல்லைகள் கொடுத்து வருகிறேன் என்றும், எனக்கு அவ்வாறு ஆட்சேபனை செய்ய எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல.

ஒம்/–திரு. M.செல்வம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.